

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | அக்டோபர் 11, 2018 | புரட்சி 17 | முழக்கம் 39 | விலை: ரூ.3.00

## திருச்செங்கோடு கருத்தரங்கில் கொளத்தூர் மணி பேச்சு

# மாறுபாடுகளை மறந்து இனத்தின் உரிமைக்காக இணைந்து நின்றார்கள் பெரியாரும்–அண்ணாவும்

***"கருஞ்சட்டைக் கலைஞர்" என்ற தலைப்பில் திருச்செங்கோட்டில் 30.09.2018 ஞாயிறு அன்று நடந்த கருத்தரங்கில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரை.***

நீண்ட நெடிய காலம் தன்னுடைய அரசியலால், எழுத்துகளால், இலக்கியப் பணிகளால், கலை செயல்பாடுகளால் தமிழகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய கலைஞரை நாம் இழந்து நிற்கிறோம். இதில் தலைப்பே கூட கருஞ்சட்டைக் கலைஞர் என்பதாக அறிவித்திருக்கிறார்கள். ஒரு காலகட்டத்தில் பெரியார் இயக்கத்தில், சுயமரியாதை இயக்கத்தில் பணியாற்றிய கலைஞர், அதற்குப் பின்னால் திராவிட முன்னேற்றக் கழகமாக உருப்பெற்ற பிறகு தன்னுடைய வீரியமிக்க சொற் பொழிவுகளால் தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் எழுச்சியை, இன எழுச்சியை ஏற்படுத்தியதில் ஒரு பங்கு உடையவர் என்பதையும் தாண்டி அவர் ஒரு பெரியாரின் தொண்டர் என்ற அடிப்படையில், பெரியாரிய பார்வையில் அவர் ஆற்றிய பணிகள், அவருடைய செயல்பாடுகளைப் பற்றி நாம் பேசுவதைத்தான் நோக்கமாகக் கொண்டு தோழர்கள் 'கருஞ்சட்டைக் கலைஞர்' என்ற தலைப்பைக் கொடுத்திருப்பதாகவே நான் கருதுகிறேன்.

"உலகத்தின் எத்தனை அகராதிகளை எடுத்துப் போட்டாலும் சுயமரியாதை என்ற சொல்லுக்கு ஈடான ஒரு சொல்லைக் காணவே முடியாது" என்று பெரியார் சொல்லுவார். அது எல்லா உரிமைகளைப் பெறுகின்றவரை குறிக்கிற ஒற்றைச்சொல் என்பதாக பெரியார் சொல்லுவார். கலைஞரை செய்தி யாளர்கள் ஒருமுறை நேர்காணல் செய்தபோது, உங்களைப் பற்றி சுருக்கமாகச் சொல்லுங்கள் என்று கேட்டனர். கலைஞர் அதற்குப் பதில் சொல்லுகை யில் தான் முதல்வராக இருந்தேன் என்பதையோ, தன்னுடைய போராட்ட வாழ்வையோ அல்லது தன் இலக்கியத்தையோ சொல்லாமல் 'நான் மானமிகு சுயமரியாதைக்காரன்' என்று சொன்னார். அதைவிட சிறந்த அறிமுகம் தனக்கு தேவையில்லை என்று அவர் கருதியதால்தான் சுருக்கமான சொற்களால் சுயமரியாதைக்காரன் என்று தன்னைப்பற்றி சொன்னார் கலைஞர். மற்றவர்கள் அவரைப்பற்றி எழுதுவது வேறு, அவரைப் பற்றி அவரே மதிப்பிட்டுக் கொள்வது வேறு. சுயமரியாதைக்காரன் என்று தன்னை சொல்லிக்கொள்வதில்தான் கலைஞர் பெருமை கண்டார்.

ஒரு எளிய குடும்பத்திலிருந்து, காலங்காலமாக வரலாற்றில் உரிமை பறிக்கப்பட்ட சமுதாயத்தில் பிறந்து வெளியே வந்து தன்னுடைய பள்ளிப் பருவத்தில், இளமைக்காலத்தில் அரசியலில் ஈடுபாடு கொண்டவர் கலைஞர். அப்போது தமிழ் மொழியை அழிக்க வந்த இந்திக்கு எதிரான போராட்டத்தில் தன்னை இணைத்துக்கொண்டு கையெழுத்து ஏடு நடத்தி, அப்போது ஒரு இயக்கமாக மாணவர் அமைப்பு கண்டு அதிலிருந்து தனது வாழ்க்கையை அமைத்துக்கொண்டவர். வளர்ந்த பின்னால் ஏதேனும் ஒரு பலனை எதிர்பார்த்து இணைந்தவர் என்று கலைஞரை சொல்லிவிட முடியாது. பள்ளிப்பருவம் என்பது தனக்குப் பட்டதை வெளிப்படுத்துகிற ஒரு பருவம். அவர் மனதில் ஏற்பட்ட அந்த மொழி உணர்ச்சியும், அதனால் நம் இனம் மீண்டும் இரண்டாவது குடிமக்களாக ஆக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சமும்தான் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் அவரை ஈடுபட வைத்தது.

அதன் தொடர்ச்சியாக அவர் சுயமரியாதை இயக்கத்தில், பெரியார் இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறார். திராவிட முன்னேற்றக் கழகம் என்ற புதிய அமைப்பைக் கண்டபோது கலைஞருக்கு 25 வயதுதான். அந்த அமைப்பின் ஒரு குறிப்பிடத்தக்க தலைவராகவும் அவர் அப்போது இருந்து வந்திருக்கிறார் என்பதையும் நாம் பார்க்க வேண்டும். அந்த அமைப்புக்கு தலைமை ஏற்றவருக்கே அப்போது 40 வயதுதான். அதற்குப் பின்னால் இருந்த அண்ணா தனது தம்பிகள் என்று




அழைத்துக் கொண்டவர்களிலும் 30 வயதுக்கு மேல் யாருமில்லை. அப்படித்தான் அந்த இயக்கம் இருந்தது. துடிப்புள்ள இளைஞர்களைக் கொண்ட இயக்கமாகத் தொடங்கி 8 ஆண்டு காலம் தேர்தல் அரசியலில் ஈடுபடாத இயக்கமாகத்தான் திமுக செயல்பட்டு வந்தது.

இதில் நாம் மூன்று செய்திகளைப் புரிந்து கொள்ள வேண்டும். எப்படி நம் தலைவர்கள் நமக்கு வழிகாட்டியிருக்கிறார்கள் என்பதற்காக இதைச் சொல்ல வேண்டும். 1947 ஆகஸ்ட் 15 இந்தியாவுக்கு விடுதலை என்று சொல்லப்பட்டது. அந்த விடுதலையை பெரியார் துக்கநாள் என்றார். இரண்டு எசமான்களில் ஒரு எசமான் போய்விட்டான். எனவே இது மகிழ்ச்சியான நாள் என்று அண்ணா குறிப்பிட்டார். துக்கநாள் என்று சொன்னவர் கட்சியின் தலைவர். மகிழ்ச்சியான நாள் என்று சொன்னவர் கட்சியின் பொதுச் செயலாளர். ஒரு பெரிய சிக்கலில் மாறுபட்ட நிலையை எடுத்த பின்னரும் இரண்டு ஆண்டுகள் திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளராகவே அண்ணா நீடித்தார். அவர் அப்படி நீடிப்பதற்கு பெரியார் தடையாக இருக்க வில்லை, அனுமதித்தார்.

உலகமே உற்றுநோக்குகிற ஒரு சிக்கலில் முரண்பட்ட இரு நிலைகளை எடுத்தாலும்கூட அதையும்விட தமிழ்நாட்டுக்கு நாம் இணைந்து செயலாற்ற வேண்டியத் தேவை இருக்கிறது. தமிழ் சமுதாயத்தை இழிவிலிருந்து மீட்க வேண்டியதும், தமிழ்நாட்டை உயர்த்த வேண்டிய கடமையும் நம்மிடம் இருக்கிறது என்ற உணர்ச்சிதான் இருவரையும் இணைத்து வைத்திருந்தது. இப்போதெல்லாம் சிறுசிறு காரணங்களுக்காக கட்சியை விட்டு நீக்கப்படுகிறார்கள். ஆனால் அப்போது எவ்வளவு பெரிய சிக்கலில் மாறுபட்ட நிலை எடுத்திருந்தாலும் ஒன்றாக இருந்தார்கள்.

அதற்குப்பிறகு அண்ணா பிரிந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகுதான் சென்னை மாகாணத்தில் நீண்ட நெடிய காலமாக செயல்பட்டு வந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கை செல்லாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு சொல்லுகிறது. அதற்குப் பெரியார் போராட்டம் முன்னெடுக்கிறார். 1951ஆம் ஆண்டில் இரண்டு கழகங்களும் முரண்பட்டு, ஒருவரை ஒருவர் விமர்சனம் செய்துகொண்டிருந்த காலம் அது. ஆனால் அப்போது பெரியார் நடத்தியப் போராட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் பங்கேற்றது. அது ஒட்டுமொத்த தமிழினத்துக்கான போராட்டம். நமக்குள் கருத்து வேறுபாடு இருக்கலாம், முரண்பாடு இருக்கலாம், ஆனால் நாம் தமிழ்நாட்டின் நன்மைக்காக இணைந்திருக்க வேண்டியத் தேவை இருக்கிறது என்பதைக் காட்டியது அந்தப் போராட்டம்.

அடுத்து இன்னொரு நிலைப்பாட்டைப் பார்த்தாலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் நேரடி எதிர்க்கட்சியாக இருந்தது காங்கிரஸ் கட்சிதான். காங்கிரஸ் கட்சியிலிருந்த ஒரு முதலமைச்சரை நீக்கிவிட்டு காமராஜர் முதலமைச்சராக வருகிறார். அவர் தேர்தலில் போட்டியிட்டு சட்டமன்ற உறுப்பினராக ஆக வேண்டியிருக்கிறது. அப்போது அவர் நாடாளுமன்ற உறுப்பினர்தான். எனவே சட்டமன்றத்துக்கு போட்டியிடுகிறபோது பெரியார் காமராஜருக்கு ஆதரவு தருகிறார். 1925ஆம் ஆண்டு காங்கிரசுக் கட்சியை விட்டு வெளியேறிய பின்னால் 30 ஆண்டுகள் காங்கிரசுக்கு எதிராகப் பேசி வந்த பெரியார் காமராஜர் என்ற தமிழர் முதலமைச்சராக வருவது தமிழ்நாட்டுக்கு நல்லது என்று கருதி ஆதரிக்கிறார். ஆனால் அந்தக் காங்கிரசு ஆட்சியை வீழ்த்திவிட்டு தன்னை அரசியலில் நிலைநிறுத்திக் கொள்ள விரும்புகிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் அண்ணாவும் அந்தத் தேர்தலில் காமராஜரை ஆதரிக்கிறார்.

சாதாரண அரசியல்வாதிகள் இந்த வாய்ப்பிலாவது அவர்களைத் தோற்கடித்து விடலாம் என்றுதான் கருதியிருப்பார்கள். ஆனால் இவர்கள் சாதாரண அரசியல்வாதிகளாக இருக்கவில்லை. தங்களுடைய அரசியல் பிணக்குகளைவிட, முரண்பாடுகளைவிட தமிழகத்தின் நன்மைதான் முதன்மையானது என்ற அடிப்படையில்தான் இருவரும் இணைந்து நிற்கிறார்கள். இப்படிப் பலவற்றை உதாரணமாகச் சொல்லலாம்.

### ம.பொ.சி.யின் திராவிட எதிர்ப்பு

ம.பொ.சி. என்று ஒருவர் இருந்தார். அவரைத்தான் தலைவர் என்று இப்போது பலர் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அப்படியொருவர் இருந்தார் என்று மட்டும்தான் நாம் சொல்ல முடியும். வாழ்நாள் முழுவதும் திராவிட இயக்கத்துக்கு எதிராக இருந்தவர் அவர். பாரதிய ஜனதா கட்சி இப்போதைய ஆட்சியாளர்களைப் பிடித்து வைத்திருப்பதைப் போல அந்தக் காலத்தில் ராஜாஜி என்கிற பார்ப்பன அரசியல்வாதி தன்னுடைய எடுபிடியாக, தன்னுடைய கருத்தைப் பேசுவதற்கான ஒரு ஆளாக ம.பொ.சி.யை வைத்திருந்தார். அவர்தான் 1951ஆம் ஆண்டில் திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடு என்று ஆண்டு முழுவதும் நடத்தினார்.

குலக்கல்வித் திட்டம் என்று ராஜாஜி கொண்டு

(3 ஆம் பக்கம்)

## செயலவைக் கூட்டம் – மாற்றுத் தேதி அறிவிப்பு

பெருமழை அறிவிப்பு காரணமாக ஒத்தி வைக்கப்பட்ட திராவிடர் விடுதலைக் கழக மாநில செயலவைக் கூட்டம் வரும் அக்.14 ஞாயிறு அன்று, திருப்பூரில் நடைபெறும்.

நாள் : 14.10 2018, ஞாயிற்றுக்கிழமை.

நேரம் : காலை 9.00 மணி

இடம் : டையர்ஸ் அசோசியேசன் கட்டிடம்,
முருகன் கோயில் பின்புறம், வாலிபாளையம், திருப்பூர்.

கழக செயலவை உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

மாவட்டத்தின் மற்ற செயலவை உறுப்பினர்களுக்கும் தெரிவியுங்கள்.

**– கொளத்தூர் மணி**
**தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்**

## ஏழு தமிழர் விடுதலை : ஆளுநரின் தாமதம் சட்டப்படி சரியானதல்ல

*ஏழு தமிழர்கள் விடுதலையில் அமைச்சரவையின் முடிவை ஆளுநர் தாமதப்படுத்துவது சட்டப்படி சரியானது அல்ல என்பதை விளக்கி வழக்கறிஞர் மனுராஜு சண்முக சுந்தரம், 'இந்து' ஆங்கில நாளேட்டில் எழுதிய கட்டுரை:*

ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் தண்டிக்கப்பட்ட எழுவரையும் விடுதலை செய்து உத்தரவிடுவதை மேலும் தாமதப்படுத்துவது 'சட்டத்தின் முன்னால் சமமாக நடத்தப்படுவதோ அல்லது சட்டப் பாதுகாப்போ எந்தவொரு நபருக்கும் மறுக்கப்படக் கூடாது' என்று வலியுறுத்தும் அரசியல் சட்டத்தின் 14–வது கூற்றை மீறுவதாகும்.

ஏழு தமிழர்களின் வழக்கு ஏராளமான திருப்பங்களைக் கொண்டது. அவர்களது கருணை மனுக்கள் 2000 தொடங்கி 2011 வரைக்கும் 11 ஆண்டுகள் எந்த முடிவுகளும் எடுக்கப்படாமலேயே உயர் அதிகார மையங்களில் கிடப்பில் போடப்பட்டிருந்தன. 2011 ஆகஸ்ட் மாதத்தில் தமிழ்நாடு சட்டமன்றமே அவர்களது மரண தண்டனையை இரத்துசெய்ய வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியது.

இந்திய ஒன்றியம் எதிர் வி.ஸ்ரீஹரன் (முருகன்) (2005) வழக்கில், உச்சநீதிமன்றம் மரண தண்டனை இரத்து செய்து எஞ்சிய காலத்துக்கு ஆயுள் காவல் தண்டனை விதித்தது. இது, குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 435இன் கீழ் மேலும் தண்டனையைக் குறைப்பதற்கான ஒரு தெளிவற்ற நம்பிக்கையை அளித்தது. அதாவது இந்த சிறைவாசிகள் மத்திய அரசின் கீழ் உள்ள சட்டப் பிரிவுகளில் தண்டிக்கப்பட்டதாலும் விசாரணை நடத்தியது மத்திய அரசு நிறுவனமான சி.பி.அய். என்பதாலும் விடுதலை செய்யும் உரிமை மத்திய அரசுக்கே உண்டு என்று மத்திய அரசு வாதிட்டது.

ஆனால், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் தண்டனைக் காலத்தை மேலும் குறைப்பதில் மாநில அரசுக்கு 161ஆவது பிரிவின்படி இருக்கும் அதிகாரத்தையும் அதே வழக்கில் அரசியல் சாசன அமர்வு உறுதி செய்தது. இருந்தாலும், கூறு 161இன் அரசியல் சட்ட அதிகாரத்தின் வரம்பை இரண்டு தீர்ப்புகளுமே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவில்லை என்பதும் உண்மை. மாநிலத்தின் நிர்வாக அதிகாரத்தைத் தன் கையில் வைத்திருக்கும் ஆளுநர், எழுவரையும் விடுவிக்கும்படி ஏற்கெனவே ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது எடுக்கப்பட்ட அமைச்சரவையின் முடிவுக்கு இசைந்த வகையிலேயே முடிவெடுக்க வேண்டும்.

ஏழு பேரையும் விடுதலை செய்ய ஏற்கனவே ஜெயலலிதா தலைமையில் அமைச்சரவை முடிவெடுத்தது. அதற்கு முன்பு தி.மு.க. ஆட்சியில் நளினியின் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்து, அமைச்சரவை எடுத்த முடிவுக்கு ஆளுநர் ஒப்புதல் வழங்கியிருக்கிறார். அத்துடன் தண்டனைக் குறைப்பில் அமைச்சரவையின் முடிவுக்கு ஆளுநர் கட்டுப்பட்டே ஆகவேண்டும் என்பதற்கு அரசியல் சட்டம் 7ஆவது அட்டவணையில் மாநிலங்களுக்கான உரிமைகளைக் குறிப்பிடும் பிரிவில் முதலிடம் பெற்றிருப்பது 'பொது அமைதி' என்ற அம்சம். எனவே மாநில அரசுக்கு வழங்கப்பட்ட தனித்துவமான அதிகாரம்தான் என்பதை இது உறுதிப்படுத்துகிறது.

அத்துடன் வி.ஸ்ரீஹரன் (முருகன்) எதிர் இந்திய ஒன்றியம் (2014) வழக்கில் ஏழு பேரும் தண்டனைக் குறைப்புக்குள்ளான பிறகு தமிழ்நாடு சிறைச் சாலைகள் விதிகளின் கீழ் இந்தப் பிரச்சினை தானாகவே வந்துவிடுகிறது. சிறைச்சாலையின் ஆலோசனைக் குழு, "ஆயுள் தண்டனையை இருபதாண்டு கால சிறைத் தண்டனையாகக் குறைத்து" முன்கூட்டியே விடுதலை செய்யவோ அல்லது பரோல் கொடுக்கவோ செய்யலாம் என்கிறது சிறைச்சாலை விதி 341. இது இந்த 7 சிறைவாசிகளின் விஷயத்திலும் பொருந்தும்.

இந்த ஏழு பேரும் அவர்கள் இழைத்த அனைத்துக் குற்றங்களுக்காகவும் சிறைவாசிகளின் சீர்திருத்தக் கொள்கையின்படியே நடத்தப்பட வேண்டும். 20 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்தவர்களை நமது சமுகத்தில் மீண்டும் இணைத்துக்கொள்ளப்பட வேண்டியவர் களாகவே நாம் கருத வேண்டும். அதில் ஏதேனும் தவறுகள் நேர்கிறது என்றால், அது தண்டனை அமைப்பின் பிரச்சினைகளை வெளிப் படுத்துகிறதேயொழிய, சிறைவாசிகளின் பிரச்சினைகளை அல்ல. "ஒவ்வொரு ஞானிக்கும் ஒரு இறந்த காலம் உண்டு. ஒவ்வொரு பாவிக்கும் ஒரு எதிர்காலம் உண்டு" என்று ஆஸ்கார் ஒயில்டு கூறியதைத் தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டிய வி.ஆர்.கிருஷ்ணய்யர், "சட்டத்தின் ஆட்சி என்பது ஞானிகள், பாவிகள் இருவருக்குமானது" என்று வலியுறுத்தினார். நமது ஆட்சியாளர்களோ இந்த வழக்கை மேலும் சிக்கலாகவே சிந்திக்கிறார்கள். மாறாக தங்களை சீர்திருத்தம் செய்து கொள்வது பற்றி சிந்திப்பதாகவே தெரியவில்லை.

### கழக ஏட்டுக்கு 100 சந்தா; கால்பந்து போட்டிகள்

# மயிலைப் பகுதி கழகம் எடுத்த பெரியார் பிறந்த நாள் எழுச்சி




27.09.2018 அன்று மாலை 6 மணிக்கு சென்மேரீஸ் பாலம் அருகே திராவிடர் விடுதலைக் கழகத்தின் சென்னை மாவட்ட மயிலாப்பூர் பகுதி சார்பாக மாநில சுயாட்சியின் நாயகன் டாக்டர் கலைஞர் நினைவரங்கில் பெரியாரின் 140வது பிறந்தநாள் பொதுக்கூட்டம் மற்றும் சுயமரியாதை கால்பந்து கழகத்தின் கால்போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு பரிசளிப்பு விழா நடைபெற்றது.

இந்த நிகழ்வை த.குமரன் தலைமையில், தோழர்கள் பி.அருண், து.அரவிந்தன், இரா.பரணிதரன் ஆகியோர் முன்னிலையில் சீ.பிரவீன் குமார் வரவேற்புரையாற்ற தென்சென்னை மாவட்ட துணைச் செயலாளர் சுகுமாறன் ஒருங்கிணைத்தார்.



முதல் நிகழ்வாக புதுகை பூபாளம் குழுவினரின் பகுத்தறிவு, நையாண்டி கலை நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியை பகுதி மக்கள் ஓரணியாகத் திரண்டு வந்து பகுத்தறிவு கருத்துகளைக் கேட்டு சிந்தித்தனர்.



அதைத் தொடர்ந்து பொதுக்கூட்டத்தில் வழக்கறிஞர்கள் அருண், திருமூர்த்தி, தென்சென்னை மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி ஆகியோர் உரையாற்றினர். தொடர்ச்சியாக ஆதித் தமிழர் பேரவை தலைவர் அதியமான், கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

கடந்த 23.09.2018 அன்று நடைபெற்ற கால்பந்து போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இரண்டாவது இடம் பிடித்த வி.ஏ.டி அணிக்கு 5,000 ரூபாய் காசோலையும் கோப்பையும் அதியமான் வழங்கினார். முதல் இடம் பிடித்த லகசி அணிக்கு 8000/- ரூபாய் காசோலையும் வெற்றி கோப்பையையும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி வழங்கினார்.



நிகழ்ச்சியில் முக்கிய நிகழ்வாக கழக வார ஏடான 'புரட்சிப் பெரியார் முழக்கம்' ஏட்டிற்கு, மயிலைப் பகுதி கழக இளைஞர்கள் 100 சந்தாக்களுக்கான தொகை ரூ. 20,000/- கழகத் தலைவரிடம் வழங்கினர். இந்த பொதுக் கூட்டத்திற்காக கடந்த 20 நாட்களாக உழைத்த மயிலாப்பூர் பகுதி இளைஞர்களுக்கு நினைவு பரிசுகள் வழங்கப் பட்டன. இறுதியாக உதய குமார் நன்றி கூறி கூட்டத்தை நிறைவு செய்தார். இரவு அனைவருக்கும் மாட்டுக்கறி உணவு வழங்கப்பட்டது.



# உயர்கல்வித் துறையை தரம் தாழ்த்தும் மசோதா

## பேரா.வெங்கடேஷ் ஆத்ரேயா

மத்திய அரசு உயர்கல்வி தொடர்பாக விவாதத்திற்கு முன்வைத்துள்ள மசோதா முன்வரைவு முற்றிலும் நிராகரிக்கப்படவேண்டும். இந்த மசோதா பல்கலைக்கழக மானியக்குழுவை அழித்தொழிக்கிறது. உயர்கல்விக்கு மானியம் வழங்கும் அதிகாரத்தை முழுமையாக மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத்துறையின் கையில் கொடுக்கிறது. பல்கலைக்கழக மானியக்குழுவிற்குப் பதிலாக உயர்கல்வி நிறுவனங்களின் கல்விசார்ந்த செயல்பாடுகளை கண்காணிக்க ‘இந்திய உயர்கல்வி ஆணையம்’ என்ற புதிய அமைப்பை முன்மொழிகிறது. உயர்கல்வி நிறுவனங்களின் நிர்வாக செயல்பாடுகளில் அரசு தலையிடாது என்று கூறும் மசோதா இந்நிறுவனங்கள் எந்த ஒழுங்காற்று முறையுமின்றி தம் விருப்பப்படி செயல்பட வழி வகுக்கிறது. உயர்கல்வி நிறுவனங்களின் கல்விசார் அம்சங்களை கண்காணிக்கவும் பொதுவாக உயர்கல்வி பற்றியப் பரிந்துரைகளை அவ்வப்பொழுது தேவை கருதி உருவாக்கி அரசுக்கு அளிக்கவும் புதிதாக அமைக்கப்படும் இந்திய உயர்கல்வி ஆணையத்திற்கு (Higher Education Commission) தலைவர், துணைத் தலைவர் மற்றும் 12 உறுப்பினர்கள் இருப்பார்கள். தலைவரையும் துணைத் தலைவரையும் உறுப்பினர்களையும் தேர்வு செய்யும் முறை மசோதாவில் முன்மொழியப்பட்டுள்ளது.

இது முழுமையாக மத்திய அரசின் கட்டுப்பாட்டில் தான் உள்ளது. இந்த ஆணையம் நாடு தழுவிய அளவில் பட்டங்கள், பட்டயங்கள் வழங்கும் கல்லூரிகள், மத்திய மாநில மற்றும் இதர பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி ஆய்வு நிறுவனங்கள் அனைத்தினுடைய உயர்கல்விசார் அம்சங்களையும் செயல்பாட்டையும் கண்காணித்து அவற்றை மூடவும் அவற்றிற்கு ஆணையிடவும் அதிகாரம் படைத்தது என்றாலும் இதன் தலைவர்மற்றும் உறுப்பினர்களை தேர்வு செய்வதில் மாநிலஅரசுகள் எந்த பங்கையும் ஆற்ற முடியாது என்பது குறிப்பிடத் தக்கது. 12 உறுப்பினர்களில் ஒரு தொழிலதிபர் இருப்பார். மற்ற உறுப்பினர்கள்: மத்திய அரசின் மூன்று உயர் அதிகாரிகள் (உயர்கல்வித் துறை செயலர், திறன் வளர்ப்புத் துறை செயலர், அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறை செயலர்); தேசிய ஆசிரியர் கல்விக்குழுவின் தலைவர்; அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி குழுவின் தலைவர்; இன்னும் இருவர் தரநிர்ணய அமைப்புகளின் தலைவர்கள்; இரண்டு பேர் துணை வேந்தர்கள், இன்னும் இரண்டு பேர் பேராசிரியர்கள். இந்த ஆணையத்தின் கட்டமைப்பே மத்திய அரசின்அதிகாரத்தை நிலை நாட்டுவதை மட்டுமே நோக்கமாககொண்டுள்ளது என்பது தெளிவு. சுயேச்சையாக சிந்திக்கவோ, அரசின் உயர்கல்வி சார் கொள்கைகளை சமூகத்தின், மக்களின் கண்ணோட்டத்தில் இருந்துவிமர்சன பூர்வமாக ஆய்வு செய்து உயர்கல்வி கொள்கைகளை நெறிப்படுத்துவது என்பதோ இத்தகைய ஆணையத்தின் மூலம் நடப்பது சாத்தியமல்ல. அதே நேரத்தில் தொழிலதிபர்கள் அரசு அதிகாரிகள் மூலமாகவும் நேரடியாகவும் ஆணையத்தின் செயல்பாடுகள் மீது செல்வாக்கு செலுத்த முடியும். உயர்கல்வி ஆணையத்தின் தலைவரை தேர்வு செய்யும் முறை மிகுந்த ஆட்சேபத்திற்கு உரியது. அரசு அதிகாரிகள் கொண்ட தேர்வுக்குழு தான் அவரை தேர்வு செய்யும். அவர் அயல்நாட்டில் வாழும் இந்தியராகவும் இருக்கலாம் என்கிறது மசோதா. அவர் கல்வியாளர்களால் தேர்வு செய்யப்பட வாய்ப்பு இல்லை. பல்கலைக்கழக மானியக்குழுவின் பத்து உறுப்பினர்களில் நான்கு பேராசிரியர்கள். ஆனால், புதிதாக அமைக்கப்படவுள்ள ஆணையத்தில் இரண்டே பேராசிரியர்கள் தான். இணைச் செயலாளர் மட்டத்தில் உள்ள மத்திய அரசு அதிகாரிதான் ஆணையத்தின் செயலராக இருப்பார்.

அரசின் கைப்பாவையாகவே, எந்த தன்னாட்சி உரிமையும் இல்லாத அமைப்பாக ஆணையம் இருக்கும். ஆணையம் நாடுமுழுவதும் உயர்கல்வியில் அடையப்படவேண்டிய கற்றல் விளைவுகளை (learning outcomes) அறிவிக்கும் என்றும் கல்வி கற்பித்தல்/மதிப்பீட்டுமுறைகள்/ஆய்வு ஆகியவற்றிற்கான நெறிமுறைகளையும் முடிவு செய்யும் என்றும் சட்ட வரைவு சொல்கிறது. நாடு முழுவதும் உள்ள முற்றிலும் வேறுபட்ட பன்முக நிலைமைகளை கணக்கில் கொள்ளாமல் நாடு முழுமைக்கும் ஒரே வகையான வரைமுறைகளை திணிக்கும் இந்த நடைமுறை பெருநகரங்களில் வாழும் வசதி படைத்த செல்வந்தர்களுக்குத் தான் சாதகமாக இருக்கும். கல்விகளத்தில் உள்ள ஏற்றத்தாழ்வான நிலைமைகளைக் கணக்கில் கொள்ளாத இந்த அணுகுமுறை ஜனநாயக விரோதமானது. இந்த ஆணையத்திற்கு நாடுமுழுவதும் உள்ள எந்த உயர்கல்வி நிறுவனத்தையும் மூட உரிமை உண்டு. இத்தகைய வானளாவிய அதிகாரங்களை மத்தியஅரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் இந்த ஆணையத்திற்கு தருவது மிகுந்த ஜனநாயக விரோதத்தன்மை கொண்ட செயலாகும். அரசியல் விருப்பு வெறுப்பு, தத்துவார்த்த இணக்கம் போன்ற அடிப்படையில் கல்வி நிறுவனங்கள் மூடப்படுவது உட்பட பல தாக்குதல்களுக்கு இட்டுச்செல்லும். மேலும் அரசின் செலவைக்குறைக்கும் நோக்குடன் பல அரசு துறை கல்வி நிறுவனங்களை மூடுவதற்கு அரசு இந்த ஆயுதத்தை பயன்படுத்த முடியும். கல்வியை முழுமையாக தனியார்மயமாக்கும் தந்திரம் இந்த மசோதாவில் இடம் பெற்றுள்ளது. மையப்படுத்தப்பட்ட ஆணையம் நாடுமுழுவதும் உள்ள லட்சக்கணக்கான உயர்கல்வி நிறுவனங்களை ஆண்டுதோறும் மதிப்பீடு செய்வது என்பது இயலாத காரியம். ஆனால், அதைத்தான் ஆணையத்தின் பணிகளில் ஒன்றாக வரைவு சட்டம் முன்வைக்கிறது. இதுமட்டுமின்றி இன்னும்பல பணிகளை ஆணையம் செய்யுமாறு பணிக்கப்படு கிறது. இவை அனைத்தும் தேவையற்ற மையப் படுத்துதலாகும். ஒட்டுமொத்தமாக கூறினால், இந்த சட்ட வரைவு உயர்கல்வியில் மாநில உரிமைகளை முற்றாக அழிக்கிறது. ‘தரம்’ என்ற கவர்ச்சிகரமான சொல்லைப் பயன்படுத்தி உயர்கல்வியில் ஒரு சில செல்வாக்குமிக்க நிறுவனங்களும் சமூக-பொருளாதார வகையில் வலுமிக்கவர்களும் மட்டுமே இருக்க முடியும் என்றார் நிலையை நோக்கி உயர்கல்வியை தள்ளுகிறது.

கல்வியாளர்களின் பங்கை குறைத்து உயர் கல்வியில் மத்திய அரசின் அதிகாரிகள், அதிகாரம் செலுத்தவும் மத்திய அரசு தனது தத்துவார்த்த நிலைப்பாட்டையும் பார்வையும் உயர்கல்வியில் திணிக்க வகை செய்கிறது. பல்கலைக்கழக மானியக் குழுவின் செயல்பாட்டில் உரிய திருத்தங்கள் கொண்டுவந்து, மைய அதிகாரக்குவிப்பை தவிர்த்து, மாநிலங்களின் உரிமைகளை அங்கீகரித்து, கல்வியாளர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோரின் பங்களிப்பை அதிகப்படுத்தி, உயர் கல்வியை ஜனநாயகப்படுத்தி, அதை மேம்படுத்துவது அவசியம். ஆனால், அரசு முன்மொழிந்துள்ள சட்டவரைவு இதற்கு நேரான எதிர்திசையில் பயணிக்கிறது. நிதி அதிகாரம் மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு துறையிடம் முழுமையாக ஒப்படைக்கப்படுவது ஆபத்தானது. மொத்தத்தில் இந்த மசோதா நிராகரிக்கப்படவேண்டும்.

**கட்டுரையாளர்: மூத்த கல்வியாளர்**
**பொருளாதார அறிஞர்**

---

*(முதல் பக்கத் தொடர்ச்சி)*

வந்ததை வரவேற்றவர் ம.பொ.சி., இந்தியாவில் அத்தனை பேரும் எதிர்த்தார்கள். தமிழ்நாட்டில் இவர் மட்டும்தான் ஆதரித்தார். அப்படிப்பட்டவரை 'நான்சென்ஸ்' என்று நேரு சொல்லிவிட்டார். தனக்கு, தங்கள் இயக்கத்துக்கு எதிராகவே நாடு முழுவதும் மாநாடு நடத்தி வந்தவருக்காக பெரியார், “நீ யார் நான்சென்ஸ் என்று எங்கள் தமிழ்நாட்டுத் தலைவரை சொல்வதற்கு” என்று நேருவைக் கேட்டார். திராவிட முன்னேற்றக் கழகமும் ம.பொ.சி.க்கு ஆதரவாகப் போராட்டத்தில் குதித்தது. ம.பொ.சி எங்கள் எதிரிதான், நேரு திட்டினால் பரவாயில்லை என்று இருவரும் மகிழ்ச்சியடையவில்லை. எங்கள் தமிழ்நாட்டுத் தலைவரைக் கேட்பதற்கு வடக்கத்தியான் நீ யார் என்ற கேள்விதான் இருவரிடம் முன்வந்தது.

நமக்குள் ஆயிரம் முரண்பாடுகள், கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் தமிழ்நாட்டின் நலன், தமிழர் நலன் என்று வருகிறபோது நம்முடைய வேறுபாடுகளை மறந்து இணைந்து செயல்பட வேண்டும் என்பதைத்தான் இந்தத் தலைவர்கள் நமக்குக் காட்டியிருக்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கும்போதுதான் அவர்கள் நமக்கு வழிகாட்டியாக இருக்கிறார்கள். நாமும் தமிழ்நாட்டின் நலன் கருதி, தமிழர்களின் நலன் கருதி தமிழ்நாட்டுக்குள் நுழைய முயற்சிக்கிற காவி பயங்கரவாதிகளை விரட்டுவதில், தடுப்பதில் இணைந்து நிற்க வேண்டும். இந்த சிந்தனைக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்த தலைவரில் ஒருவரைத்தான் நாம் இப்போது நினைவூட்டிக் கொண்டிருக்கிறோம்.

இந்த நேரத்தில் ம.பொ.சி.யைப் பற்றி நாம் நிறைய பேச வேண்டிருக்கிறது. திராவிட அரசியலின் பெருமைக்குரிய அடையாளம் என்று பேசுகிற போது, இந்த திராவிட அரசியலின் பெருமைகளை சீர்குலைத்தவர்களைப் பற்றியும் பேச வேண்டியத் தேவை நமக்கு இருக்கிறது. தமிழ்நாடு விளைவித்த தாக்கம் என்பது இங்கு இருப்பவர்களுக்குத் தெரியாது. நிழலின் அருமை வெயிலில் இருப்பவர்களுக்குத்தான் தெரியும் என்பார்கள். வெயில் என்பது வட நாட்டுக்குப் போனால்தான் தெரியும். அங்கு போனால்தான் தமிழ்நாட்டின் பெருமைகள் தெரியும்.

இருமொழிக் கொள்கையை 1967 ஆம் ஆண்டிலேயே சட்டமாக்கியது திராவிட முன்னேற்றக் கழகம். ஆனால் இப்போது 2017 ஆம் ஆண்டில் நமது அண்டை மாநிலமான கர்நாடகாவின் முதலமைச்சர், “கர்நாடகத்தில் ஓடிக் கொண்டிருக்கிற மெட்ரோ ரயில்களில் இருக்கிற இந்தி எழுத்துக்கள் அழிக்கப்பட வேண்டும்” என்று சொல்லுகிறார். அவர் இதை கட்சியின் கொள்கையாக அறிவிக்க வில்லை. அரசின் ஆணையாக உத்தரவு பிறப்பிக்கிறார்.

இதில் நடுவணரசும் சரிபங்கு முதலீடு செய்துள்ளது, இது எப்படி சரியாக இருக்குமென்று அதிகாரிகள் கேட்டார்களாம்.

“இருவருக்கும் சமபங்கு முதலீடுதான். ஆனால் ரயில் ஓடுகிற நிலம் நம்முடையது. நாம்தான் கூடுதலாக முதலீடு செய்திருக்கிறோம். எனவே ஆணை பிறப்பிக்கிறேன். இனி இந்தி எழுத்துக்கள் இருக்கக்கூடாது. இருமொழிக் கொள்கையை தமிழகம் 50 ஆண்டுகளுக்கு முன்னரே கொண்டு வந்து விட்டது. காலதாமதமாக இருந்தாலும் இருமொழிக் கொள்கையைப் பின்பற்ற வேண்டிய நிலைக்கு நாம் வந்து நிற்கிறோம்” என்று சொன்னாராம் அம்மாநில முதல்வர்.

அனைத்திந்திய அளவில், அகில இந்தியம் பேசுகிற ஒரு கட்சியின் முதலமைச்சர் இவ்வாறு சொல்கிறார். அப்படியானால் தமிழ்நாடு 50 ஆண்டுக்கு முன்னால் இருக்கிறது என்றுதான் பொருள். தொழில் காரணமாக வட நாட்டில் நான் கொஞ்ச காலம் வாழ வேண்டியத் தேவை வந்தது. அப்போது புனேவில் இருந்தேன். என்னோடு தொடர் வண்டியில் பயணம் செய்த பேராசிரியர் ஒருவர் மெல்ல மெல்ல பேச்சு கொடுப்பார். தமிழர்கள் மீது எனக்கு பெரிய மரியாதை உண்டு என அவர் என்னிடம் சொன்னார்.

ஏன் என்று கேட்டபோது, “இந்தியை உங்கள் நாட்டுக்குள் விடாமல் வைத்திருக்கின்றீர்கள் அல்லவா? இந்தப் பெருமை இந்த நாட்டில் வேறு யாருக்கும் இல்லை” என்று சொன்னார். அவர் ஒரு மராட்டியர்.

“எங்களுடைய மாநிலத்தையே இந்த காந்தி கூட்டமெல்லாம் சேர்ந்து இந்தி மாநிலமாக மாற்றி விட்டது, இப்போது கிராமத்தில் மட்டும்தான் மராட்டி மொழி இருக்கிறது. வேறு எங்கும் மராட்டி மொழியே இல்லாமல் போய்விட்டது. அலுவலகங்கள் உள்ளிட்ட எல்லா இடங்களிலும் இந்திதான். திரைப்படங்கள் கூட இந்தி மொழியில் மட்டும்தான் வருகிறது. மராட்டி மொழியையே அழித்து விடுவார்கள் போலிருக்கிறது. ஆனால் நீங்கள் இந்தியை உள்ளே விடாமல் தடுத்து விட்டார்கள்” என்றுகூறி வருத்தப்பட்டார்.

இது நடந்தது 1973-74ஆம் ஆண்டுகளில். இப்படிப் பலவற்றை சொல்லிக் கொண்டு போகலாம்.

(தொடரும்)

**தொகுப்பு : ந. பிரகாசு**

---

### நன்கொடை

நாகை மாவட்டத் தலைவர் மயிலாடுதுறை ம.மகாலிங்கம் இணையர் சுந்தராம்பாள் அவர்களின் 7.10.2018 முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு “புரட்சிப் பெரியார் முழக்கம்” இதழுக்கு வளர்ச்சி நிதியாக ரூபாய் 1000/- வழங்கினார்.

---


“புரட்சிப் பெரியார் முழக்கம்”

ஆண்டுக்கட்டணம்

ரூ.200

தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
9841489896
newsdvk@gmail.com

# ஈரோடு வடக்கு மாவட்டத்தில் தமிழர் கல்வி உரிமை மீட்பு பரப்புரை பயணம்



பெரியார் 140ஆவது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு ஈரோடு வடக்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் அனைத்து ஒன்றியப் பகுதியில் தமிழர் கல்வி உரிமை மீட்பு பரப்புரைப் பயணம் செய்வது என மாவட்ட கலந் துரையாடல் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் 23.09.2018 ஞாயிறு அன்று அந்தியூர் ஒன்றியம் அத்தாணி பகுதியில் பரப்புரைப் பயணம் துவங்கியது.

அத்தாணி பகுதியில் பெரியார் பிஞ்சு அறிவுக்கனல், யாழ்மதி ஆகி யோரின் பாடல்களுடன் பரப்புரைப் பயணம் துவங்கியது. பயணத்தின் நோக்கத்தை விளக்கி மாவட்ட செயலாளர் வேணு கோபால், நம்பியூர் இரமேசு, மாநில வெளியீட்டுச் செயலாளர் இராம இளங்கோவன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். தமிழ்நாடு அறிவியல் மன்றம் சுந்தரம் நன்றி கூறினார். அடுத்து பயணம் கீழ்வானி பகுதிக்குச் சென்று அடைந்தது.

கீழ்வானி பகுதியில் வீரா கார்த்திக், இராம இளங்கோவன் ஆகியோர் பயணத்தின் நோக்கத்தை விளக்கி உரையாற்றினர். கீழ்வானி இந்திரா நகரில் அமைந்துள்ள கழகக் கொடிக் கம்பத்தில் சதுமுகை பழனிச்சாமி கழகக் கொடி யினை ஏற்றி வைத்தார். தொடர்ந்து பயணம் ஜம்பைப் பகுதிக்குச் சென்று அடைந்தது. அங்கு கழகக் கொடியினை இராம இளங்கோவன் ஏற்றி வைத்தார். இராம இளங்கோவன், வேணு கோபால் பயணத்தின் நோக்கத்தை விளக்கி சிறப்புரை ஆற்றினர். தோழர்கள் மதிய உணவுக்கு வேணுகோபால் இல்லம் சென்றனர். மதிய உணவுக்குப் பின் பயணக்குழு பவானி பகுதிக்கு வந்தது. பவானி பழைய பேருந்து நிலையம் மற்றும் அந்தியூர் பிரிவு ஆகிய பகுதியில் அமைந்துள்ள கழகத்தின் கொடி கம்பத்தில் கழகக் கொடி ஏற்றிய பின் அங்கு நடந்த பரப்புரைப் பயணத்தில் வேணு கோபால், இரமேசு, இராம இளங்கோவன் ஆகியோர் பயணத்தின் நோக்கத்தை விளக்கி சிறப்புரை ஆற்றினர். பயணக்குழு பவானியை அடுத்து குருவரெட்டியூர் சென்று அடைந்தது. அங்கு பரப்புரைப் பயணம் பொதுக் கூட்டமாக நடை பெற்றது. பொதுக் கூட்டத்தின் முதல் நிகழ்வாக நிமிர்வு கலைக் குழுவின் பறையாட்டம் நடை பெற்றது. அதனைத் தொடர்ந்து நடை பெற்ற பொதுக் கூட்டம் நிகழ்விற்கு மாவட்டத் தலைவர் நாத்திகசோதி தலைமையேற்க, அம்மாபேட்டை ஒன்றியப் பொறுப்பாளர் வேல்முருகன் வரவேற்புரை நிகழ்த்த, மாவட்டச் செயலாளர் வேணுகோபால், நம்பியூர் ஒன்றிய பொறுப்பாளர் இரேமசு, மாநில வெளியீட்டுச் செயலாளர் இராம இளங்கோவன் ஆகியோர் பயண நோக்கத்தை விளக்கி உரை யாற்றினார்கள். திலீபன் அனை வருக்கும் நன்றி கூற பொதுக்கூட்டம் நிறைவு பெற்றது. அன்றைய பரப்புரை பயணம் அத்துடன் நிறைவு பெற்றது.

தோழர்களுக்கான மதிய உணவை சுந்தரம், வேணுகோபால் ஆகியோரும், இரவு உணவை குருவரெட்டியூர் பகுதித் தோழர்கள் ஏற்பாடு செய்து இருந்தனர். பயணத்தில் மாவட்ட கழகத் தோழர்கள் பெருவாரியாக கலந்து கொண்டனர்.

# கடுவனூரில் கழகத் தலைவர் பங்கேற்ற கூட்டம்



1.10.2018 அன்று விழுப்புரம் மாவட்டம் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் பெரியார் பிறந்த நாள் விழா, தமிழர் கல்வி உரிமை மீட்பு விளக்கப் பொதுக் கூட்டம், பாக்கம் கிராமத்தில் மாலை 5 மணியளவில் நடைபெற்றது. முன்னதாக கடுவனூர் பேருந்து நிறுத்தம் அருகிலிருந்து பாக்கம் பொதுக் கூட்டம் மேடை வரை தோழர்கள் பறையிசையுடன் பேரணியாக வந்தனர். கடுவனூர் - பாக்கம் இரண்டு ஊர்களில் பெரியார் சிந்தனை பலகை திறப்பு, கல்வெட்டு திறந்து கழகக் கொடியையும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஏற்றி வைத்தார்.

இந்நிகழ்வைத் தொடர்ந்து, பொதுக் கூட்டம் கழகத் தோழர்களின் ஜாதி ஒழிப்பு, பகுத்தறிவு பாடல்களுடன் தொடங்கியது. பெரம்பலூர் தாமோதரன் ‘மந்திரமல்ல, தந்திரமே’ என்ற அறிவியல் கலை நிகழ்ச்சியைத் தொடர்ந்து கூட்டம் நடைபெற்றது. இரா. துளசிராஜா தலைமை வகித்தார். என்.மா. குமார், தே. இராமச்சந்திரன், மு. நாகராஜ், சா. நீதிபதி, கே.வே. ராஜேஷ், சி. ஆசைத்தம்பி ஆகியோர் முன்னிலை வகிக்க ச.கு. பெரியார் வெங்கட் வரவேற்புரையாற்றினார். விழுப்புரம் மேற்கு மாவட்டத் தலைவர் க. மதியழகன், மாவட்டச் செயலாளர் க. இராமர், அமைப்பாளர் சி.சாமிதுரை, புதுச்சேரி தீனா, அறிவியல் மன்ற அமைப்பாளர் ஆசிரியர் சிவகாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ந.அய்யனார் ஆகியோர் உரைக்குப் பின் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார்.

மாவட்டத் தலைவர் இளையரசன், துணைச் செயலாளர் குப்புசாமி, கடலூர் பாரதிதாசன், செஞ்சி பெரியார் சாக்ரடீசு உள்பட நூற்றுக்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றனர். வ. பிரபு நன்றியுரையாற்றினார். அ. பாரதிதாசன், இரா. கார்மேகம், கொ. ஏழுமலை, ஊ. திலீப்குமார், வினோத், மா. கிருஷ்ணன், தென்னரசு ஆகியோர் விழா குழுவினராக செயல்பட்டனர்.

குறிப்பு : எட்டு ஆண்டுகளுக்கு முன் இந்த ஊரில் கழகத்தின் சார்பில் பொதுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அப்பொழுது இந்த ஊரைச் சார்ந்த இளைஞர்கள் கூட்டம் நடைபெற விடாமல் தடுத்து நிறுத்திய அந்த தோழர்களே இந்தக் கூட்டத்தை தலைமையேற்ற நடத்தினர். நாற்பது இடங்களில் சுவர் விளம்பரம் செய்திருந்தனர்.

## கற்க கல்வி அறக்கட்டளை சார்பில் முப்பெரும் விழா



எம்.ஜி.ஆர். நகல் கழக செயல் பாட்டாளர் கரு. அண்ணாமலை, தோழர்களுடன் இணைந்து நடத்தி வரும் அமைப்பு ‘கற்க கல்வி அறக் கட்டளை’. கரு. அண்ணாமலை மற்றும் சக தோழர்கள் வீ.பொற் கோவன், குமணன், விருகை செல்வம், மூவேந்தன்,குன்றத்தூர் சசிக்குமார், விநாயகமூர்த்தி, மணி மொழியன், சு,துரைராசு, இராமபுரம் க,சுப்பிரமணி, கரிகாலன், சிலம்பம் சிவாஜி, மதன்குமார், சட்டக் கல்லூரி மாணவர்கள் சுரேசு, அன்பரசன், அம்பேத்கர் துரை மற்றும் தோழர்களின் கடுமையான உழைப்பில் கிட்டத்தட்ட 8 இலட்ச ரூபாய் செலவில் “கற்க” கல்வி அறக்கட்டளை சார்பில், தந்தை பெரியார் பிறந்தநாள் விழா, கல்வித்தந்தை காமராசர் நினைவுநாள், தமிழ்வழிக் கல்வி பயிலும் 1000 மாணவர்களுக்கு உதவி வழங்கும் விழா ஆகிய “முப்பெரும் விழா” 2.10.2018 அன்று சிறப்பாக நடந்தது.

முகநூலில் பார்த்து கல்வி அறக்கட்டளைக்கு நன்கொடைகள் வழங்கிய தோழர்கள், எம்.ஜி.ஆர் நகர் மார்க்கெட்டில் கடைகள் வைத்திருக்கும் வணிகர்கள் (இந்நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற முக்கிய காரணமானவர்கள்), விழாவில் கலந்துகொண்டு 50 ஆயிரம் உதவி வழங்கி சிறப்பித்த இனமான நடிகர் சத்தியராசு, கழகத் தலைவர் கொளத்தூர் மணி, த.வா.க. தலைவர் தி.வேல்முருகன், கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், குறிப்பாக சென்னை மாவட்ட கழகப் பொறுப்பாளர்கள் அன்பு தனசேகர், இரா. உமாபதி, மயிலை சுகுமார் போன்றோரின் ஒத்துழைப்புடன் இந்நிகழ்வு மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில் 12ஆம் வகுப்பில் 1100 மதிப்பெண் பெற்ற திவிக-வைச் சேர்ந்த த.இளவேனில், பா.வெண்ணிலா, வினிதா, யமுனா மற்றும் திக-வைச் சேர்ந்த வெ.தா.தமிழ்ச்செல்வி, அன்புமதி மற்றும் தமிழ்த் தேசிய அமைப்பைச் சேர்ந்த மாணவி ரீதா ராஜன் ஆகிய மாணவர்களுக்கு இனமான நடிகர் சத்தியராசாவால் பாராட்டு கேடயமும் கல்வி உதவியும் வழங்கப்பட்டது. இவ்விழாவில் சுமார் 600 மாணவர்களுக்கு உதவியும் பரிசுப் பொருள்களும் வழங்கப்பட்டன.


## தற்போது விற்பனையில்

**‘நிமிர்வோம்’ – செப்டம்பர் 2018 இதழ்**




- பெண் விடுதலைக்கு வலிமை சேர்க்கும் தீர்ப்புகள் - தலையங்கம்
- கருப்பும் - காவியும் இணைந்த புள்ளி (பெரியார் - குன்றக்குடி அடிகளார்)
- பரியேறும் பெருமாள் - விமர்சனம்
- பெல்காமில் “பெரியார் - காந்தி - இராஜாஜி” உரையாடல்
- பூமி சூரியனை சுற்றுகிறது என்றால் சூரியன் எதைச் சுற்றுகிறது?
- மோடி ஆட்சியில் பொருளாதாரம் வளர்ந்துள்ளதா?

மற்றும் பெரியார் சிந்தனைகளுடன்...

தனி இதழ் விலை : ரூ.20

தொடர்புக்கு: நிர்வாகி, 95, டாக்டர் நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர், சென்னை-600 004.

தொலைபேசி எண்: 044 24980745/7299230363

www.dvkperiyar.com/nimirvomdvk@gmail.com


Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 11th October 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN